# திணைமொழி ஐம்பது

##1
புகழ் மிகு சாந்து எறிந்து புல் எரி—ஊட்டி
புகை கொடுக்க—ப்—பெற்ற புலவோர் துகள் பொழியும்
வான்—உயர்—வெற்ப இரவு—இன்—வரல்—வேண்டா
யானை—உடைய—சுரம்

##2
கணை—முகை—கை—என க் காந்தள் கவின
மணை—முகை என்று எண்ணி மந்தி கொண்டாடும்
விறல்—மலை—நாட வரவு அரிது—ஆம்—கொல்லோ
புனம்—உம் அடங்கின காப்பு

##3
ஓங்கல்—இறு—வரை—மேல் காந்தள் கடி கவின
பாம்பு என ஓடி உரும்—இடிப்ப கண்டு இரங்கும்
பூங்—குன்ற—நாடன் புணர்ந்த—அ—ந்—நாள்—போலா
ஈங்கு—நெகிழ்ந்த—வளை

##4
ஏனம் இடந்திட்ட ஈர்—மணி கொண்டு எல்லிடை
கானவர்—மக்கள் கனல் என க் காய்(?)—காய்த்தும்
வான்—உயர்—வெற்பன் வருவான்—கொல் என்—தோழி—
மேனி—பசப்பு க் கெட

##5
விரை கமழ் சாரல் விளை புனம்—காப்பார்
வரை—இடை வாரன்மின் ஐய உரை—கடியர்
வில்லினர் வேலர் விரைந்து செல் அம்பினர்
கல்—இடை—வாழ்நர் எமர்


-------------------------------------
proofed and segmented by v.s.r

##6
யானை உழலும் அணி கிளர் நீள்-வரை க்
கானக-வாழ்க்கை க் குறவர் மகளிரேம்
ஏனல்-உள் ஐய வரவு-மற்று-என்னை-கொல்
காணினும் காய்வர் எமர்

##7
யாழ்-உம் குழல்-உம் முழவு-உம் இயைந்தென
வீழும் அருவி விறல் மலை நல்-நாட
மாழை-மான் நோக்கியும் ஆற்றுள் இர-வரின்
ஊர் அறி கௌவை தரும்

##8
வேங்கை மலர கமழ் தண்-சிலம்பு-இன்
வாங்கு-அமை-மென்-தோள் குறவர்-மகளிரேம்
சோர்ந்து குருதி ஒழுக மற்று இ-ப்-புறம்
போந்தது இல் ஐய களிறு

##9
பிணி-நிறம் தீர்ந்து பெரும்-பணை-த்-தோள் வீங்க
மணி-மலை-நாடன் வருவான்-கொல் தோழி
கணி-நிற-வேங்கை மலர்ந்து வண்டு ஆர்க்கும்
மணி-நிற-மாலை-ப்-பொழுது

##10
பலவு-இன்-பழம் பெற்ற பைங்-கண்-கடுவன்
எல-என்று இணை பயிரும் ஏ-கல்-சூழ்-வெற்பன்
புலவும்-கொல் தோழி புணர்வு அறிந்து அன்னை
செலவு-உம் கடிந்தாள் புனத்து

##11
கழுநீர் மலர் க் கண்ணுய் கௌவையோ நிற்க
பொருள் நீரார் காதலர் பொய்த்தனர் நீத்தார்

அழி–நீர–ஆகி அரித்து எழுந்து தோன்றி
வழி நீர் அறுத்த சுரம்

##12
முரி–பரல–ஆகி முரண் அழிந்து தோன்றி
எரி பரந்த கானம் இயை பொருட்கு ப் போவீர்
அரி பரந்த உண் கண்ணுள் ஆற்றுமை நும்மின்
தெரிவார் யார் தேரும்–இடத்து

##13
ஓங்கு குருந்தோடு அரும்பு ஈன்று பாங்கர்
மராஅ மலர்ந்தன தோன்றி விராஅய் க்
கலந்தனர் சென்றுர் வலந்த–சொல்–எல்லாம்
பொலந்தொடீஇ பொய்த்த குயில்

##14
புன்கு பொரி மலரும் பூந்–தண்–பொழில் எல்லாம்
செங்–கண் குயில் அகவும்–போழ்து கண்டும்
பொருள் நசை உள்ளம் துரப்ப துறந்தார்
வரு நசை பார்க்கும் என்–நெஞ்சு

##15
சிறு–புன்–புறவு–ஒடு சிற்றெழால் சீறும்
நெறி அரு நீள்–சுரத்து அல்குவர்–கொல் தோழி
முறி எழில் மேனி பசப்ப அருள் ஒழிந்து
ஆர்–பொருள் வேட்கையவர்

##16
கருங்–கால் மராஅ நுணு–வ்–ஒடு அலர
இருஞ்–சிறை வண்டு இனம் பாலை முரல
அரும்பிய முள் எயிற்று அம்–சொல் மடவாய்
விரும்பு நாம்–செல்லும்–இடம்

##17
கல்–அதர்–வாயில் கடுந்–துடிகள் பம்பும்
வில் உழுது வாழ்நர் குறும்பு–உள்ளும் போவர்–கொல்
எல்–வளை மென்–தோள் நெகிழ பொருள் நசைஇ
நல்கா த் துறந்த நமர்

##18
கதிர் சுட கண் உடைந்து முத்தம் சொரியும்
வெதிர் பிணங்கும் சோலை வியன்–கானம் செல்வார்க்கு
எதிர்வன போலிதே எல்–வளையோ கொன்னே–
உரிவன–போல உள

##19
கலை–ஒடு மான் இரங்கு கல் அதர் அத்த
நிலை அஞ்சி நீள்–சுரத்து அல்குவர்–கொல் தோழி
முலை–ஒடு சோர்கின்ற பொன்–வண்ணம் அன்னோ
வளை–ஒடு சோரும் என்–தோள்

##20
ஏற்றிய வில்–இன் எயினர் கடுஞ்–சுரம்
பாற்றினம் சேர ப் படு–நிழல் கண்டு அஞ்சி
கூற்று–அன வல்–வில் விடலை–ஓடு என்–மகள்
ஆற்றும்–கொல் ஐய நடந்து

##21
அஞ்சனம் காயா மலர குருகு–இலை
ஒண்–தொடி நல்லார் முறுவல் கவின் கொள
தண்–கமழ் கோடல் துடுப்பு ஈன காதலர்
வந்தார் திகழ்க நின்–தோள்

##22
மென்—முலை—மேல் ஊர்ந்த பசலை மற்று—என்—ஆம்—கொல்
நல்—நுதல் மாதராய் ஈதோ நமர் வருவர்
பல்—நிற—முல்லை அரும்ப பருவம் செய்து
இன்—நிறம் கொண்டது இ—க்—கார்

##23
சென்றார் வருவர் செறிதொடீஇ கார் இஃது—ஓ
வெஞ்—சின வேந்தர் முரசு—இன் இடித்து உரறி
தண்—கடல் நீத்தம் பருகி தலை—சிறந்து
இன்றை—இன்—நாளை—மிகும்

##24
செஞ்—சுணங்கின் மென்—முலையாய் சேர்-பசலை தீர் இஃது—ஓ
வஞ்சினம் சொல்லி வலித்தார் வரு குறி—ஆல்
வெஞ்—சினம் பொங்கி இடித்து உரறி க் கார் வானம்
தண்—பெயல் கான்று புறவு

##25
கரு இயல் கார் மழை கால் கலந்து ஏந்த
உருகு மட—மான் பிணை—ஓடு உகளும்
உருவ முலையாய் நம்—காதலர் இன்னே—
வருவர் வலிக்கும்—பொழுது

##26
இருங்—கடல் மாந்திய ஏர்—கொள்—எழிலி
கருங்—கொடி முல்லை கவின முழங்கி
பெரும்—பெயல் தாழ பெயர் குறி செய்தார்
பொருந்த நமக்கு உரைத்த—போழ்து

##27
ஆயர் இனம் பெயர்த்து ஆம்பல் அடைதர
பாய முழங்கி படு—கடல்—உள் நீர் முகந்து


proofed and segmented by v.s.r

மா-இரு-ஞாலம் இருள் கூர் மருள் மாலை
சேயவர் செய்த குறி

##28
அதிர்-குரல்-ஏறு-ஓடு அலை கடல் மாந்தி
முதிர் மணி நாகம் அனுங்க முழங்கி
கதிர் மறை மாலை கனை பெயல் தாழ
பிதிரும் முலை-மேல் சுணங்கு

##29
கோடல்-அம்-கூர்-முகை கோள் அரா-நேர்-கருத
காடு-எலாம் கார் செய்து முல்லை அரும்பு ஈன
ஆறு-எலாம் நுண்-அறல் வார அணியிழாய்
போதராய் காண்பாம் புறவு

##30
அருவி அதிர குருகு-இலை பூப்ப
தெரி-ஆ-இன-நிரை தீம்-பால் பிலிற்ற
வரி-வளை த் தோளி வருவார்-நமர்-கொல்
பெரிய-மலர்ந்தது இ-க்-கார்

##31
பழனம் படிந்த படு கோட்டு எருமை
கழனி வினைஞர்-க்கு எறிந்த பறை கேட்டு
உரன் அழிந்து ஓடும் ஒலி புனல் ஊரன்
கிழமை-உடையன் என்-தோள்-கு

##32
கணை-க்-கால் நெடு-மருது கான்ற நறுந்-தாது
இணை-க்-கால நீலத்து இதழ்-மேல் சொரியும்
பணை-த்-தாள்-கதிர் ச் செந்-நெல் பாய் வயல் ஊரன்
இணைத்தான் எமக்கு-உம் ஓர்-நோய்

##33
கடை—ஆயார் நட்பு—ஏ—போல் காஞ்சி நல்—ஊர
உடைய—இள—நலம் உண்டாய் கடை அ—க்—
கதிர்—முலை ஆகத்து க் கண் அன்னார் சேரி—
எதிர் நலம் ஏன்று நின்றாய்

##34
செந்—நெல் விளை வயல் ஊரன் சில—பகல்
தன்—நலம் என்—அலார்—க்கு ஈயான் எழு—பாண
பாரித்த அல்குல் பணை—த்—தோளார் சேரி—உள்
வாரி—க்கு ப் புக்கு நின்று ஆய்

##35
வேனில் பருவத்து எதிர் மலர் ஏற்று ஊதும்
கூனி வண்டு அன்ன குளிர் வயல் நல்—ஊரன்
மாண் இழை நல்லார் இள—நலம் உண்டு அவர்—
மேனி ஒழியவிடும்

##36
செந்—தாமரை மலரும் செய்—வயல் நல்—ஊர
நொந்தால் மற்று உன்னை—ச்—செயப்படுவது என்—உண்டாம்
தந்தாய்—உம்—நீ—ஏ தர வந்த நல்—நலம்
கொண்டாய்—உம்—நீ—ஆய—க்—கால்

##37
பல்—கால்—உம் வந்து பயின்று உரையல்—பாண கேள்
நெல் சேர் வள—வயல் ஊரன் புணர்ந்த நாள்
எல்—வளையம் மென்—தோளேம் எங்கையர்—தம்—போல
நல்லவர்—உள் நாட்டம்—இலேம்

##38
நல்—வயல் ஊரன் நலம் உரைத்து நீ பாண
சொல்—இன் பயின்று உரைக்க—வேண்டா ஒழிதி—நீ

எல்லு நல்-முல்லை த் தார் சேர்ந்த இருங்-கூந்தல்
சொல்லும் அவர்-வண்ணம் சோர்வு

##39
கருங்-கயத்து-ஆங்கண் கழுமிய நீலம்
பெரும்-புற-வாளை ப் பெடை கதூஉம் ஊரன்
விரும்பு நாள் போலான் வியல்-நலம் உண்டான்
கரும்பு-இன் கோது ஆயினேம் யாம்

##40
ஆம்பல் அணி த் தழை ஆரம் துயல்வரும்
தீம்-புனல் ஊரன் மகள்-இவள் ஆய்ந்த நறுன்-
தே-மலர் நீலம் பிணையல் செறி மலர் த்
தாமரை தன்-ஐயர் பூ

##41
நெய்தல் படப்பை நிறை கழி த் தண் சேர்ப்பன்
கைதை சூழ் கானல்-உள் கண்ட நாள் போல் ஆனுன்
செய்த குறி-உம் பொய் ஆயின ஆயிழையாய்
ஐது-கொல் ஆன்றூர் தொடர்பு

##42
முத்தம் அரும்பும் முட-த்-தாள் முது-புன்னை
தத்தும் திரை தயங்கும் தண்-அம்-கடல்-சேர்ப்ப
சித்திர-ப்-பூங்-கொடி-அன்னுள்-கு அருளீயாய்
வித்தக-ப்-பைம்-பூண் நின்-மார்பு

##43
எறி சுறு நீள்-கடல் ஓதம் உலாவ
நெறி இரு க் கொட்கும் நிமிர் கழி ச் சேர்ப்பன்
அறிவு அறு இன்-சொல் அணியிழையாய் நின்-இல்
செறிவு அறு செய்த குறி


-------------------------------------
proofed and segmented by v.s.r

##44
இன-மீன் இருங்-கழி ஓதம் உலாவ
மணி நீர் பரக்கும் துறைவ தகும்-ஓ
குண-னீர்மை குன்று க் கொடி-அன்னுள்-பக்கம்
நினே நீர்மை இல்லா ஒழிவு

##45
கடல் கொழித்திட்ட கதிர் மணி முத்தம்
படம் அணி அல்குல் பரதர் மகளிர்
தொடலே சேர்த்து ஆடும் துறைவ என்-தோழி
உடலும் உறு நோய் உரைத்து

##46
முருகு இயல் கானல் அகன்-கரை ஆங்கண்
குருகு-இனம் ஆர்க்கும் கொடுங்-கழி-ச்-சேர்ப்ப
மருவி-வரல்-உற-வேண்டும் என்-தோழி
உரு அழி உள்-நோய் கெட

##47
அணி-பூங்-கழி க் கானல் அற்றை-நாள் போலான்
மணி எழில் மேனி மலர் பசப்பு ஊர
துணி-கடல்-சேர்ப்பன் துறந்தான்-கொல் தோழி
தணியும் என்-மென்-தோள் வளே

##48
கறங்கு மணி நெடுந்-தேர் கண் வாள் அறுப்ப
பிறங்கு மணல்-மேல் அலவன் பரப்ப
வறம் கூர் கடுங்-கதிர் வல்-விரைந்து நீங்க
நிறம் கூரும் மாலே வரும்

##49
மயில்-கொல் மடவாள்-கொல் மா-நீர் த் திரை-உள்
பயில்வது-ஓர்-தெய்வம்-கொல் கேளீர் குயில் பயிரும்
கன்னி இள-ஞாழல் பூம்-பொழில் நோக்கிய
கண்-இன் வருந்தும் என்-நெஞ்சு

##50
பவழம்-உம் முத்து-உம் பளிங்கு-உம் விரைஇ
புகழ க் கொணர்ந்து புறவு அடுக்கும் முன்றில்
தவழ் திரை ச் சேர்ப்பன் வருவான்-கொல் தோழி
திகழும் திரு அமர் மார்பு


-------------------------------------
proofed and segmented by v.s.r